Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 2, 2021

வெள்ளிக்கிழமை ஜுலை 02, 2021 | ஒளி: 06 கதிர்: 37 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

## மடு திருவிழா இன்று



எஸ்.றொசேரியன் லெம்பேட்-

மடு திருத்தலத்தின் ஆடித் திருவிழா திருச்சொரூப பவனி, இன்று (02) நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

பசளை இறக்குமதிக்காக செலவிடப்படும் தொகையை

## ‘விவசாயிகளுக்கு கிடைக்க வழிசெய்வேன்’



எதிர்காலச் சந்ததியினரைத் தொற்றா நோய்களிலிருந்து காப்பாற்றுவதற்காக, வருடாந்தம் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவிடப்படும் 80,000 மில்லியன் ரூபாயை, நாட்டின் அப்பாவி விவசாயிகளுக்குக் கிடைக்க வழிசெய்வதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (01) இடம்பெற்ற இலங்கை தேசிய விவசாயிகள் சம்மேளனத்தின் மாவட்ட விவசாயப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஊழியர்களை

# ‘பணியிலிருந்து நீக்காது பாதுகாக்கவும்’

தொழிலதிபர்கள், வர்த்தகர்களிடம் பிரதமர் வேண்டுகோள்

ஊழியர்களை பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாக அவர்களைப் பாதுகாத்து, இந்தத் தொற்று நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்குமாறு, அனைத்து தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை ஆடை பிராண்டு சங்கம் (SLABA), இலங்கை சில்லறை விற்பனையாளர்கள் சங்கம் (SLRA) ஆகியன எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில், அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, பிரதமர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



வைத்தியர்கள் ஓய்வு:

## 63 வயதாக அதிகரிப்பு



அரசாங்க வைத்தியர்களின் கட்டாய ஓய்வு வயதெல்லை 63 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அனைத்து தரங்களில் உள்ளவர்களுக்கும் இது பொருந்துமென விடுக்கப்பட்டுள்ள அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

புரவிப் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு

## நட்டஈடு பெற்று கொடுக்க ஏற்பாடு



புரவிப் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலார்களுக்கான நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

“கடந்தாண்டு டிசெம்பர் மாதம் வீசிய புயல் காரணமாக, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான பல மில்லியன் ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிவடைந்துள்ளன” என்றார்.

தொடர்ச்சி P2



மின்னேரிய சம்பவம்:

## இராணுவ மேஜருக்கு பிணை

மின்னேரியா தேசிய பூங்காவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரியை தாக்கி அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸில் சரணடைந்ததன் பின்னர் மேஜரை கைது செய்த பொலிஸார், கெகிராவ நீதிவான் நீதிமன்றில் நேற்று (01) ஆஜர்படுத்தினர். இதன்போதே, 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

ஒழுக்க விதிகளை மீறும்

## ‘பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை’

ஒழுக்க விதிகள் மற்றும் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் செயற்படும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

‘18 கிலோ கிராம் கொழுந்தை எங்களால் பறிக்க முடியாது’

## கொந்தளித்த கொட்டியாக்கலை மாலையில் மௌனமானது



எஸ்.சதீஸ், எம். கிருஸ்ணா

பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவனத்துக்குரிய கொட்டியாக்கலை தோட்டத் தொழிலாளர்கள், அத்தோட்ட நிர்வாகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று மாலை வரையிலும் தொடர்ந்த போதிலும், மாலை 6 மணியுடன் கைவிடப்பட்டது. தேயிலைத் தொழிற்சாலைக்குச் செல்லும் பிரதான வாயிலை மறித்து 6 இளைஞர்களால் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் (30) ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ‘முன்னே இருபது வரும் பின்னே பசில் வருவார்’

நளின் எம்.பி தெரிவிப்பு: புதுமையில்லை என்கிறார்



“பாராளுமன்றத்துக்கு பசில் ராஜபக்ஷ வருவது எமக்கொன்றும் புதுமையான விடயமல்ல” எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, “அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் வந்தபோதே, பசில் வருவாரென்று தெரிந்துகொண்டோம்” என்றார்.

தொடர்ச்சி P2

## அதிசொகுசு பஸ்ஸில் கொழும்பு வந்தவர்களை பொலிஸார் அள்ளினர்

10 மாதங்களில் 45,935 பேர் கைது



மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு வந்த அதிசொகுசு தனியார் பஸ்ஸின் சாரதி, நடத்துநர், 38 பயணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் கொழும்பு-14 கிரேண்பாஸ், பகுதியில் வைத்தே, பஸ்ஸை வழிமறித்த பொலிஸார், அதிலிருந்த அனைவரையும் நேற்று (01) கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

பாலியல் செயற்பாடுகளுக்கு சிறுமியை விற்றமை:

## 21 பேர் கைது; பிக்குவும் சிக்கினார்

பாலியல் செயற்பாடுகளுக்காக, 15 வயதான சிறுமியை இணையத்தளத்தின் ஊடாக விற்பனை செய்தமை தொடர்பில், இதுவரையிலும் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பௌத்த மதகுரு (பிக்கு) ஒருவரும் அடங்குகின்றார்.

அச்சிறுமியை பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்தமை, கொள்வனவு செய்தமை, ஒத்துழைப்பு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜூன் 30ஆம் திகதியன்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## செல்வபுரம் வாள்வெட்டில் 8 பேர் காயம்; துண்டித்த கையும் பொருத்தப்பட்டது

எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், கோண்டாவில், செல்வபுரம் பகுதியில், நேற்று முன்தினம் (30) இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில், 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில், ஒருவரது கை துண்டிக்கப்பட்டுள்ளதாக, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்டுடியோ ஒன்றை நடத்தி வந்த இரு குழுக்கள் மீதே, இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வாள், கூரிய ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் வந்த 6 பேர் கொண்ட கும்லொன்று, குறித்த குழுவினர் தங்கியிருந்த வீட்டுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2

## ‘கோதுமை விலையும் பேக்கரி பண்டங்களின் விலையும் கூடாது’



கோதுமை மாவின் விலையையும் அதிகரிக்காது அதனூடாக பேக்கரி பண்டங்களின் விலைகளையும் அதிகரிக்காது இருப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுக்கும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் இடையில், நேற்று (01) இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே மேற்கண்டவாறு இணக்கம் காணப்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோதுமைமாவின் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது. ஆகையால், பாண் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாஜரின் உள்ளிட்ட பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையால், சாதாரண விலைக்கு பேக்கரி உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு இங்கு கலந்துரையாடப்பட்டது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 'விவசாயிகளுக்கு கிடைக்க வழிசெய்வேன்'

அதேவேளை, சேதனப் பசளையைப் பயன்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்க வேண்டாம் என்று, நாடளாவிய ரீதியில் உள்ள 11 இலட்சம் விவசாயிகள் சார்பில், மாவட்ட விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஜனாதிபதியிடம் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டைய விவசாய முறைமைகளுக்கு மீண்டும் திரும்பி, மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற உணவை வழங்குவதே தங்களின் முக்கியமான கடமையும் பொறுப்புமாகும் என்றும், விவசாயப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

எனவே, ஆரோக்கியமான எதிர்காலத் தலைமுறைக்காக, ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த விவசாயிகள், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததைப் போல, ஓர் அணியின் கீழ் இருந்து சேதனப் பசளை சவாலை வெற்றிகொள்வதற்கு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பதாக உறுதியளித்தனர்.

இந்தச் சம்மேளனம், 11 இலட்சம் விவசாயிகள், 17,000 விவசாயச் சங்கங்கள் மற்றும் 563 விவசாயச் சேவை மையங்களை உள்ளடக்கியதாகும்.

இது திடீரென எடுக்கப்பட்ட முடிவு அல்ல; இது, தான் ஜனாதிபதி வேட்பாளராக, "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாகும்.

விவசாயிகளுக்கு இதுவரை கிடைத்த வருமானம் குறைவடைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், வருமானம் குறையுமானால், அரசாங்கம் அந்தத் தொகையை வழங்கும் என்றும், விவசாயிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாக இடமளிக்கப்பட மாட்டாது என்றும், ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதேவேளை, கடந்த ஆட்சிக் காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த விவசாயிகளுக்கான "விவாயக் காப்புறுதித் திட்டம்", நேற்றிலிருந்து முதல் மீண்டும் நடைமுறைக்கு வரும் வகையில், அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகேயால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

"விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது"என்று, அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே இதன்போது தெரிவித்தார்.

# 'பணியிலிருந்து நீக்காது பாதுகாக்கவும்'

வங்கிக் கடன் நிவாரணம் பெற்றுக்கொள்ளல், ஆடைத் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றல், கொவிட் -19 வழிகாட்டுதல்களுக்கு அமைய ஆடை விற்பனை நிலையங்களை திறக்க அனுமதி பெறல், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி தொடர்பான பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி செயற்பாட்டுக்காக தனியான அமைச்சு அறிமுகப்படுத்தப்பட்டமை தொடர்பில், இலங்கை ஆடை பிராண்ட் சங்கத்தின் தலைவர் லலந்த வதுதுர, பிரதமருக்கு தமது சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் கொவிட்-19 உலகளாவிய தொற்று நிலைமை காரணமாக இதுவரை சுமார் 24 மாதக் காலங்களாக தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு நிதி அமைச்சின் ஊடாக அவசர நிவாரணங்களை பெற்றுக் கொடுக்குமாறும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து ஊழியர்களை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளமையால் அவர்களை பணிநீக்கம் செய்வதை தவிர, மாற்று வழி இல்லை எனத் தெரிவித்த இச்சங்கங்களின் பிரதிநிதிகள், அவ்வாறு ஊழியர்களை நீக்குவதும் கடினமானதொரு செயற்பாடாக இருப்பதாகவும் கூறினர்.

# மடு திருவிழா இன்று

கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மடு திருத்தலத்தின் ஆடித் திருவிழா, சுகாதார வழிகாட்டலுக்கமைய, தொடந்து நவ நாள் திருப்பலிகள் நடைபெற்றுவந்தன.

இந்நிலையில், இன்று (02) காலை, திருவிழா திருச்சொரூப பவனி நடைபெறவுள்ளது.

இதன்போது, காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில், குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல்ட் அன்டனி ஆண்டகை, கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் மேதகு அன்டன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து, திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்க உள்ளனர்.

குறிப்பாக, கொரோனா தொற்றில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வகையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது. திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும்.

# 63 வயதாக அதிகரிப்பு

ஏப்ரல் 20, 2021 முதல் இவ்வறிப்பு ஓய்வூதிய பிரமாணத்தில் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட தினமான இத்தினம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச சேவைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கட்டாய ஓய்வு வயதெல்லை 61ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ மேஜருக்கு பிணை

மின்னேரிய தேசிய வனப் பகுதிக்குள் அனுமதியின்றி, கடந்த 23ஆம் திகதியன்று நுழைந்த இரண்டு இராணுவ வாகனங்களை, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சோதித்துள்ளனர்.

அதன்போது, இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலையொன்று ஏற்பட்டதுடன், சம்பவம் தொடர்பில், இரு தரப்பினராலும் ஹபரண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் (30) விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த இராணுவ அதிகாரி உள்ளிட்ட ஏனையோரை கைது செய்யுமாறு கெக்கிராவ நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, குறித்த இராணுவ அதிகாரி ஹபரண பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை சரணடைந்தார்.

அதனை தொடர்ந்து, அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன், இரு தரப்பு முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ள்ளதாகவும் அவர் கூறினார்.

# 'பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை'

இவ்வாறான குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்கள் பணியாற்றும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

"பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் ஒழுக்க விதிகளுக்கு புறம்பான மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக் காலமாக பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

"இவற்றுடன் தொடர்புகொண்டுள்ளதாக அடையாளம் காணப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்படுவதுடன், அவர்களது பணி இடைநிறுத்தம் செய்யப்படுகின்றனர்.

"இந்நிலையில், ஒரு சிலரின் இது போன்ற செயற்பாடுகளால் ஒட்டுமொத்த பொலிஸாரின் நற்பெயருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் இவ்வாறு அடையாளம் காணப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும்"என்றார்.

இதேவேளை, இத்தகைய பொலிஸ் உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்யும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்கிரமரத்னவுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நட்டஈடு பெற்றுக் கொடுக்க ஏற்பாடு

அந்தச் சேதம் தொடர்பான முழுமையான மதிப்பீட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

# அதிசொகுசு பஸ்ஸில்....

இந்நிலையில், மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை கட்டாயமாக அமலப்படுத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவித்த பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண, மாகாண எல்லைகளைக் கடக்க முயற்சிக்கும் வாகனங்கள் தொடர்ந்தும் திருப்பி அனுப்பப்படுகின்றன என்றார்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு மட்டுமே மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க அனுமதிக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், மாகாணங்களுக்கு இடையிலான தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சட்ட விதிகளை மீறி, பயணிப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என நினைவுபடுத்திய அவர், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 403 பேர், நேற்றுக்காலை 6 மணியுடன் 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 45,935 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# 'முன்னே இருபது வரும் பின்னே பசில் வருவார்'

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (1) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், அரசாங்கத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பற்றி கதைப்பதற்கு கூட யாருமில்லை என்பதால் சேர் பெயிலென தெரிந்துகொண்டு, அதிலிருந்து மீள பசிலைப் பயன்படுத்தப் பார்க்கின்றனர் என்றார். இந்த அரசாங்கத்தால் பொருளாதார நிதி முகாமைத்துவத்தை முன்னெடுக்கமுடியவில்லை. அதனால்தான் பசில் வந்து, பொருளாதார நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பாரென நினைக்கின்றனர். எமது அரசாங்கத்தில், பொருளாதாரம் தொடர்பான கல்வி, அனுபவம், தெளிவு உள்ளவர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன ஆகியோரிடமே கையளிப்போம் என்றார்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்த பசிலுக்கு முடிந்திருந்தால் 2015-2019ஆம் ஆண்டுக்குள் செய்திருக்கலாம். 2015ஆம் அரசாங்கத்தின் தோல்விக்கு பசில் தான் காரணமென வசைபாடியவர்கள் இன்று பொருளாதாரத்தைப் பலப்படுத்த பசிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மஹிந்த தோல்வியடைந்து விட்டார்; கோட்டாவும் தோல்வியடைந்து விட்டார். பசிலையும் நியமிக்கப் பார்த்து, இவர்களது தோல்வியை மறைக்கப் பார்க்கின்றனர் என்றார்.

# கொந்தளித்த கொட்டியாக்கலை மாலையில் மௌனமானது

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு நேற்று (01) வருகைத் தந்த ஹட்டன் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரசிக்க ரத்னாயக்க, பொகவந்தலாவை பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகளும் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

"உங்கள் போராட்டத்துக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஆனால், கொட்டியாக்கலை கீழ் பிரிவில் இந்த மாதம் 29ஆம் திகதி 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய, எதிர்வரும் 14 நாள்களுக்கு சுய தனிமை பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு" கூறினர்.

எனினும், எமது உயிர்கள் போனாலும் பரவாயில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும் வரை, எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என அங்கிருந்தவர்கள் கூறிவிட்டனர். இதனால், பொலிஸாருக்கும் அங்கு கூடியிருந்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சம்பள நிர்ணயச் சபையால் தமக்கு அதிகரிக்கப்பட்ட1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு, தோட்ட நிர்வாகம் 18 கிலோகிராம் கொழுந்தைப் பறித்தால் மாத்திரமே வழங்குவதாக அழுத்தம் விடுப்பதாகவும் அவ்வாறு 18 கிலோகிராம் கொழுந்தைப் பறிக்காத தொழிலாளர்களால் பறிக்கப்படும் கொழுந்து கிலோ ஒன்றுக்கு 40 ரூபாய் விகிதம் செலுத்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிர்வாகத்தின் இச்செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தற்போதைய நிலைமையின் கீழ், கடந்த 2 மாதங்களாக தோட்ட நிர்வாகத்தால் தொழிலாளர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் 18 கிலோகிராம் கொழுந்தை தினமும் பறிக்காமையால் தமது கொடுப்பனவுகள் குறைக்கப்படுவதால், பொருளாதார ரீதியாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கொட்டியாக்கலை தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளதுடன், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் வினவியபோது, தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த 1,000 ரூபாய்க்காக நாளொன்றுக்கு 18 கிலோகிராம் கொழுந்தை அவர்கள் பறிப்பது அவசியமாகும். 18 கிலோகிராம் கொழுந்தை பறிப்பதற்கான வாய்ப்பு இருந்தும் தொழிலாளர்கள் அதனை நிராகரிப்பதால், தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அதிகாரிகள், எமது இந்த கோரிக்கையை பல தோட்டத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு தொழிலில் ஈடுபடும் நிலையில், சில தொழிற்சங்கங்களின் அழுத்தங்களால் தோட்டத் தொழிலாளர்கள் சிலரே இவ்வாறு போராட்டங்களை முன்னெடுப்பதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, இன்றையதினம் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று, ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து அனுப்புவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். எனினும், இந்தப் போராட்டத்தை 14 நாள்களுக்குப் பின்னர் நடத்துவதற்கு தீர்மானித்த மக்கள், கலைந்துசென்றுவிட்டனர்.

> "இந்தப் போராட்டத்தை 14 நாள்களுக்குப் பின்னர் நடத்துவதற்கு தீர்மானித்த மக்கள், நேற்று (01) மாலையிலேயே அவ்விடத்திலிருந்து கலைந்துசென்றுவிட்டனர்

# செல்வபுரம் வாள்வெட்டில் 8 பேர் காயம்; துண்டித்த கையும் பொருத்தப்பட்டது

அத்துடன், ஸ்டுடியோ அமைந்திருக்கும் பகுதியைத் தீமூட்டி எரித்து சேதப்படுத்தியுள்ளதுடன், அங்கிருந்த கார் மற்றும் ஓட்டோ என்பனவற்றையும் சேதப்படுத்தி தப்பிச்சென்றுள்ளனர்.

இதன்போது, இளைஞர் ஒருவரின் கை துண்டாடப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சத்திர சிகிச்சையின் மூலம், துண்டாடப்பட்ட கை பொருத்தப்பட்டது.

நேற்று முன்தினம் (30) இரவு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சத்திர சிகிச்சை, நேற்று (01) அதிகாலை 4 மணிக்கு வெற்றிகரமாக நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சிறு காயங்களுக்கு உள்ளான ஒருவர் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய ஏழு பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

# 21 பேர் கைது; பிக்குவும் சிக்கினார்

அந்த மூவரில், மிஹிந்தலை பிரதேச சபையின் உப-தலைவர் மற்றும் பிரபல வர்த்தகர் ஒருவரும் அடங்குகின்றார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறித்த சிறுமியைக் கொள்வனவு செய்த மேலும் சிலர் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், சிறுமியை விற்பனை செய்வதற்கு உதவிய மற்றுமொரு நபர், வேறொரு பெண்ணை விற்பனை செய்வதற்காக அழைத்து சென்றிருந்த சந்தர்ப்பத்தில் வெள்ளவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சிறுமி, அவிசாவளையிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு சுமார் 21 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமைக்கு பங்காளிகள் எதிர்ப்பு

## பசிலுக்குப் புதிய சிக்கல்?



இரட்டைக் குடியுரிமையுள்ள பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்துக்கு வருவதற்கும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கும் ஆளுங் கட்சியின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி, பிரதமரிடம் தங்களது எதிர்ப்பை நேரடியாகத் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, அடுத்த மாதத்தில் பாராளுமன்றத்துக்கு செல்ல உள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி ஒன்றைப் பெற்றுக்கொள்வாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதியாக இருந்தபோது உருவாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பதவியை மீண்டும் பசிலுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், பிரதமர் வசமிருக்கும் நிதி அமைச்சும் பசிலுக்கு வழங்கப்படும் எனவும், கட்சி ஆளுங்கட்சியினர் சிலர் பசில் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதால், இதில் இழுபறிகள் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்:

# ஜம்இய்யத்துல் உலமா அதிருப்தி

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பாக, இஸ்லாமிய மார்க்க மற்றும் சிவில் நிறுவனங்களின் ஆலோசனைகளைக் கருத்திற்கொள்ளாமல், அமைச்சரவையில் எடுக்கப்படிருக்கும் தீர்மானங்கள் மிகக் கவலைக்குரியதாகவும் அதிருப்தி உடையதாகவும் இருக்கின்றன என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் தெரிவித்தார்.

இது தொடர்பாக , அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது;

அமைச்சரவையில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பாக எடுக்கப்படிருக்கும் தீர்மானம் தொடர்பில், மீள்பரிசீலனை செய்யும்படியும் இவ்விடயங்கள் தொடர்பான, மார்க்க அடிப்படைகளை உரிய முறையில் கவனித்து, நாட்டின் அனைத்து பிரஜைகளின் உரிமைகளையும் மதித்துத் தீர்மானம் எடுக்கவேண்டுமெனவும் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும்,எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையில், இந்நாட்டின் பல்லின கலாசாரத்தைப் பேணக்கூடிய விதத்தில், அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்த ஒரு பொறிமுறை மூலம் இவ்விடயங்கள் தொடர்பாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் படியும் அரசாங்கத்தையும் நீதி அமைச்சரையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மிக அன்பாக வேண்டிக் கொள்கின்றது.

நாட்டினதும், முஸ்லிம் சமூகத்தினதும் நன்மைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் எடுக்கப்படக் கூடிய சகல முன்னெடுப்புகளுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்பதையும் நாம் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சுற்றாடலைப் பாதுகாக்கவும்' ;

## மாசுபடுத்துவோருக்கு எதிராக வழக்கு



லொக்கல ஓயா வனப் பகுதியில் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக, மத்திய சுற்றாடல் அதிகார சபை ஊடாக வழக்கு தொடரப்படுமென சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

லெக்கல ஓயாவைச் சுற்றியுள்ள பகுதிகளில், சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனைத் தொடர்ந்தே பாதிப்பை ஏற்படுத்திய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, மகாவலி அதிகார சபை, அப்பிரதேசத்துக்குரிய கிராம அலுவலர் ஆகியோர் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இதன்படியே சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிலுவையில் இருவரை அறைந்த பூசாரி பலகொல்லையில் சிக்கினார்

இருவரை கடத்திச்சென்று, அவ்விருவரின் உள்ளங்கைகளில் ஆணிகளை அறைந்தாகக் கூறப்படும் பூசாரி, நேற்று (01) மாலை கைது செய்யப்பட்டார்.

தலைமறைவாகியிருந்த பூசாரி, கண்டி பலகொல்ல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். எனினும், ஏனையோரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர். அக்குழுவைச் சேர்ந்த மேலுமிருவர், ஏற்கெனவே, கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட இருவரையும் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வானும் கைப்பற்றப்பட்டுள்ளது என விசேட அதிரடிப்படையினர் அறிவித்திருந்தனர்.
இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் இன்னும் 10க்கும் மேற்பட்டவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கும் விசேட அதிரடிப்படையினர், அவர்களைத் தேடி வலைவிரித்துள்ளதாக தெரிவித்தனர்.

கண்டி- பலகொல்ல பிரதேசத்தை சேர்ந்தவர்களே, அவ்விருவரையும் அம்பிட்டி பகுதிக்குக் கடத்திச் சென்று, கடந்த 25ஆம் திகதியன்று இவ்வாறு துன்புறுத்தியுள்ளனர்.

பேஸ்புக்கில் சேறு பூசியதாகக் கூறப்படும் இவ்விரு இளைஞர்களையும், தன்னுடைய வீட்டுக்கு அந்த பூசாரி அழைத்துள்ளார். அதன்பின்னர், அம்பிட்டிய பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த சிலருடன் சேர்ந்தே அவ்விருவரையும் கடுமையாக தாக்கிவிட்டு, இவ்வாறு மிகக் கொடூரமான முறையில், ஆணிகளை ஏற்றித் துன்புறுத்தியுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அந்தப் பூசாரியும் ஏனையோரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர் என்றும் பிரதேசத்திலிருந்தும் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவித்த பலகொல்ல பொலிஸார், மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட இவ்விருவரும் அம்பிட்டிய கால்தென்ன பிரதேசத்தில் பற்றைக்காட்டுக்குள் மறைந்திருந்த போதே கைது செய்யப்பட்டனர். ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையான இவ்விருவரும் கைது செய்யப்படும் போது, ஹெரோய்ன் பயன்படுத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'கூட்டமைப்பு எம்.பிக்களை முக்கிய கூட்டங்களுக்கு

## 'அழைப்பதே இல்லை'



இந்தக் கூட்டத்துக்குக் கூட அமைச்சரிடம் கலந்தாலோசித்த பின்னரே வருகை தந்துள்ளேன்

மட்டக்களப்பில் உள்ள ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நிலைமையானது, குரங்குகின் கையில் பூமாலை கிடைத்ததுபோல உள்ளதாகத் தெரிவிக்கும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பில் நடைபெறும் முக்கிய கூட்டங்களுக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் அழைக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மட்டக்களப்புக்கு நேற்று (01) விஜயம் செய்திருந்தார். அதன்பின்னர், நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன், இந்தக் கூட்டத்துக்குக் கூட அமைச்சரிடம் கலந்தாலோசித்த பின்னரே வருகை தந்துள்ளேன். மட்டக்களப்பில் நடைபெறும் எந்தவிதமானக் கூட்டங்களுக்கும் கூட்டமைப்பின் மட்டக்களப்பு எம்.பிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே இந்தக் கூட்டத்துக்கு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரன் ஜனா வருகை தரவில்லை. மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவதற்குத் தேவையாகவுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து எங்களிடம் முன்மொழிவுகள் உள்ளன.

எனினும், எங்களிடம் உள்ள முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு எமக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை எனவும் கூறினார்.

எரிபொருள்களின் விலையைக் குறைக்க

## ஆளுங்கட்சியினர் கோரிக்கை



தெற்காசியாவில் இலங்கையில் மாத்திரமே குறைந்த விலையில் எரிபொருள் விநியோகிக்க ப்படுவதாகத் தெரிவிக்கும் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக, எரிபொருள் விலையை குறைக்க வேண்டுமென, பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுநாயக்கவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. தெற்காசியவில் உள்ள ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் இலங்கையிலேயே குறைவான விலைக்கு எரிபொருள் கிடைக்கிறது.

உலகில் எரிபொருள் குறைவான விலைக்குக் கிடைக்கும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருக்கிறது. எனினும் மக்கள் தற்போது சிரமங்களுக்கு முகங்கொடுத்து இருப்பதால், எரிபொருள்களின் விலையை குறைக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில், கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் சி.சி.ரி.வி கமெரா

## அரச பகுப்பாய்வுக்கு அனுப்பிவைப்பு

கனகராசா சரவணன்

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராவின், டி.வி.ஆர், மொரட்டுவை, இரசாயனவியல் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்குப் பகுப்பாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இந்தச் சம்பவத்தின் முக்கிய சாட்சியாக, அமைச்சரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி. ரி.வில் கமெராக்களின் பதிவாகியிருந்த காட்சிகள் ஆராயப்படவிருந்தன. எனினும், துப்பாக்கிச் சூடு இடம்பெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே, பழுதடைந்து இருந்தமையால், அது கழற்றப்பட்டு, திருத்தக் கொடுக்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்தது.





## விலைகளைக் குறை

அத்தியாவசிப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையை கண்டித்தும் விலைகளைக் குறைக்குமாறு கோரியும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், தலைமையில் கொழும்பு-2, கொம்பனித்தெருவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: பிரதீப் தில்ருஷண)




### தேவை

வீட்டை சுத்தப்படுத்தல், ஆடைகளை துவைத்தல், இஸ்திரியிடல், சமையலறைக்கு உதவிச்செய்தல், சகல வீட்டுவேலைகளுக்கும் வீட்டுப் பணிப்பெண்கள், பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை மற்றும் கிருலபனையிலிருந்து தேவை. சமைப்பதற்கு தேவையில்லை. வயது 40க்கு மேல். தொடர்புகளுக்கு 0760326320



### அற்றோனி தத்துவத்தினை இரத்து செய்தல்

கொழும்பு 05, தொன் கரோலிஸ் வீதி, இல. 06 ஏ, யில் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மெரிலேண்ட்எல்ம் டிரீலேண்ட் சில்வர் ஸ்பிரிங் இல.2145 இல் வசிக்கும் தமயந்தி சித்ரா அல்விஸ் (கடவுச் சீட்டு இலக்கம்: N1046896) என்ற நான் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருவது யாதெனில் என்னால் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் மெரிலேண்ட் இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோனி தத்துவத்தின் மூலம் பொரலெஸ்கமுவ, மாலனி புலத்சிங்ஹல மாவத்தை, இல. 34/3, இல் வசிக்கும் லக்ஸ்மி எவொன் செனவிரத்ன (தே.அ.அ.இல. 367521597V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோனி தத்துவத்தினை இப்பொழுதில் இருந்து இல்லாதொழித்து இரத்து செய்கின்றேன் எனவும் இதன் பிறகு சட்டரீதியாக செல்லுபடியற்றது எனவும் என்னால் இத்தால் மூலம் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தமயந்தி சித்ரா அல்விஸ்






விருதுகளின் வகை

- வருடத்திற்கான சிறந்த ஊடகவியலாளர் மேர்வின் டீ சில்வா விருது*
- வருடத்திற்கான சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த தனித்துவ செய்திக்கான விருது*
- வருடத்திற்கான இளம் செய்தியாளர் டென்சில் பீரிஸ் விருது*
- வருடத்திற்கான சிறந்த சுகாதாரம் மற்றும் மருத்துவ கட்டுரையாளர்**
- வருடத்திற்கான சிறந்த சூழலியல் அறிக்கையாளர்**
- வருடத்திற்கான சிறந்த விளையாட்டு செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறப்பாக வடிமைக்கப்பட்ட பத்திரிகை*
- வருடத்திற்கான சிறந்த வணிக மற்றும் நிதியியல் செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறந்த கேலிச்சித்திரம்**
- விஷேட சூழ்நிலைகளின் போது அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது.**
- வருடத்திற்கான சிறந்த புகைப்பட ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த பத்தி எழுத்தாளர் பீ.ஏ.சிறிவர்த்தன விருது.**
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி எழுதப்பட்ட சிறந்த செய்தி / விவரணக்கட்டுரை**
- சமூக பிரச்சினைகள் தொடர்பான சிறந்த அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது.**
- வருடத்திற்கான சிறந்த விவரணக்கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது.**
- சிறந்த செய்தி இணையத்தளம்.**

* எந்தமொழியாயினும் ஒரே விருது

** சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருது

பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைக்குச் சொந்தமான இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பவற்றின் பிரதி குறித்த பத்திரிகை ஆசிரியரால் அல்லது இலங்கை பத்தி ரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : வியாழக்கிழமை - ஜூலை 15, 2021

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான விருதுவழங்கல் நிகழ்வு நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

வெற்றியாளர்கள் சுயாதீன நடுவர் குழாம் ஒன்றால் தெரிவு செய்யப்படுவர்

பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய அறிவுறுத்தல் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தை இல.96 , பேர்னாட் சொய்சா மாவத்தை, (கிருளவீதி), கொழும்பு - 5. முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.slpi.lk அல்லது www.pccsl.lk இணையத்தளங்களில் இருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யலாம்

ஒழுங்கமைப்பு : இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

TEGOSL Sri Lanka Press Institute

யாழில் 2ஆவது டோஸை தவற விட்டவர்களுக்கு

# 'நாளை சந்தர்ப்பம்'

■ எஸ்.நிதர்ஷன்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில், கொவிட் -19 தடுப்பூசியின் 2ஆவது டோஸை செலுத்தத் தவறியோருக்கு, நாளை (03) அந்தச் சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்படுமென்று, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில், அவர் நேற்று (01) விடுத்துள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், யாழ். மாவட்டத்தில் ஜுன் 28ஆம் திகதி முதல், கொவிட் -19 தடுப்பூசியின் 2ஆவது டோஸ் செலுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் பணி, இன்று (02) வரை இடம்பெறவுள்ள நிலையில், இந்த ஐந்து நாள்களிலும் இரண்டாவது தடுப்பூசியைப் பெறத் தவறியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்றும், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாளை (03), அந்தந்தப் பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் காலை 8 மணி முதல், தடுப்பூசி வழங்கப்படும்.

அத்துடன், தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளால் ஒவ்வாமை ஏற்படுபவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசி, யாழ். போதனா வைத்தியசாலையிலும் தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகளிலும் செலுத்தப்பட்டிருந்தது. இவர்களுக்கான 2ஆவது தடுப்பூசி, நாளை (03) 8 மணி முதல் அதே வைத்தியசாலைகளில் செலுத்தப்படும் என்றும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீன் வியாபாரம் செய்தால்

## 'நல்ல வருமானம் கிடைக்கும்'

■ விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள சந்தையில் மீன் உள்ளிட்ட கடலுணவுகளை வியாபாரம் செய்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தினால், கரைதுறைப்பற்று பிரதேச சபையால் பாரியளவில் வருமானத்தை ஈட்டமுடியும் என, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, நேற்று முன்தினம் (30) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், "முல்லைத்தீவில் இருந்து கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் கரைதுறைப்பற்றுப்பற்று பிரதேச சபைக்கு எந்த வருமானமும் கிடைப்பதில்லை. எனவே, இவ்வாறு முல்லைத்தீவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகளுக்கு, கரைதுறைப்பற்று பிரதேச சபை வரி அறவீடுகளைச் செய்யவேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகர சந்தையில், மீன் உட்பட கடலுணவுகளை வியாபாரம் செய்யக்கூடிய வகையிலான ஏற்பாடுகளை கரைதுறைப்பற்று பிரதேச சபை விரைவில் முன்னெடுக்க வேண்டுமென்றார்.

குளத்தின்

## 'அணைக்கட்டை உயர்த்தினால் பிரச்சினை ஏற்படாது'

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி, கரியாலைநாகபடுவான் குளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் குமுழமுனை வரை காணப்படுகின்ற வயல் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவித்த பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன், இந்தக் குளத்தின் அணைக்கட்டை உயர்த்துவதால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை என்றும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கரியாலைநாகபடுவான் குளத்தில் கடந்த பத்தாண்டுகளில் சொல்லும்படியான புனரமைப்புப் பணிகள் இடம்பெறவில்லை. 2010ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர், இந்தக் குளத்தின் சிறு திருத்த வேலைகளுக்காக ஐந்து மில்லியன் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. குளத்தின் அணைக்கட்டு முழுமையாக 07 கிலோ மீற்றர் தூரம் பண்டிவெட்டிக் குளம் அடங்கலாக புனரமைக்கப்பட வேண்டும். இக்குளத்தின் நீர் வருகை ஆறான முடக்கன் ஆறு குறைந்தது 01 கிலோ மீற்றர் தூரத்துக்கு துப்புரவு செய்யப்பட வேண்டும்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் முக்கிய குளமாக இக்குளம் காணப்பட்ட போதிலும், நீர் வருகின்ற முடக்கன் ஆறு துப்புரவு செய்யப்படாததன் காரணமாக, குளத்தின் நீர் மட்டம் உயர்வதில் தாமதங்கள் உள்ளன. எனவே, முடக்கன் ஆற்றைத் துப்புரவு செய்து கரியாலைநாகபடுவான் குளத்தின் நீர் மட்டத்தை அதிகரிக்க வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

நடந்து சென்ற

## இளைஞன் மீது வாள்வெட்டு

■ எம்.றொசாந்த்

மீசாலை, புத்தூர் சந்தியில், நேற்று முன்தினம் (30) காலை 11.30 மணியளவில், வீதியால் நடந்து சென்ற இளைஞன் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர், வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மந்துவில் பகுதியை சேர்ந்த 23 வயதான இளைஞன், இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞன், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸில் பயணித்த இந்த இளைஞன், புத்தூர் சந்தியில் இறங்கி நடந்து சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர், இளைஞனை வழிமறித்து, தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வாளால் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழில், அண்மைக்காலமாக வாள்வெட்டு சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், வாள்வெட்டு சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இறுதிச் சடங்குக்கு சென்றோர் தனிமையில்

■ எம்.றொசாந்த்

பருத்தித்துறை, தும்பளை பகுதியில், உயிரிழந்த ஒருவருக்கு கொரோனா தொற்றுறுதியான நிலையில், இறந்தவரின் இறுதிச் சடங்குக்குச் சென்றவர்கள், அவரவர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தும்பளையைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபர் ஒருவர், செவ்வாய்க்கிழமை (29) அதிகாலை வீட்டில் வைத்து, திடீரென உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புத் தொடர்பில் கேள்வியுற்ற பொதுச் சுகாதார பரிசோதகர் அங்கு சென்று, உயிரிழந்தவரின் சடலத்தை, பி.சி.ஆர் பரிசோதனைக்கு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன், வீட்டிலிருந்தவர்களிடமும் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெற்றார்.

அந்தப் பரிசோதனை முடிவுகளில் உயிரிழந்தவருக்கும் அவரது குடும்பத்தில் மூவருக்கும் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், நேற்று முன்தினம் காலை இறுதிச் சடங்குக்குச் சென்றவர்கள், அவரவர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், உயிரிழந்தவரின் சடலம், சுகாதார விதிமுறைகளுக்கமைய மின் தகனம் செய்யப்பட்டது.

## படையினரால் மிளகாய் உற்பத்தி

■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்





பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் விவசாயப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய்களை, உள்ளூர் சந்தைகளில் விநியோகித்துள்ளதாக, இராணுவத்தினர் தெரிவித்தனர்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டலுக்கமைய, 'துரு மித்துரு நவ ரட்டக்' திட்டத்தின் கீழ், விவசாய உற்பத்தியில் தன்னிறைவை இலக்காக கொண்டு, விவசாய பண்ணையில் மிளகாய் உற்பத்தியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும், இராணுவத்தினர் தெரிவித்தனர்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சூழவுள்ள பொதுமக்களின் பெருமளவான நிலப்பரப்பை, இராணுவத்தினர் கையகப்படுத்தி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ளனர்.

அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சுமார் 32 வருட காலங்களுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நிலையில், தம்மைச் சொந்த இடங்களில் மீள் குடியேற்றுமாறு கோரி, கடந்த 11 வருடங்களுக்கும் மேலாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர். குறித்த காணிகளில், இராணுவத்தினர் விவசாய பண்ணைகள், கால்நடை பண்ணைகள் என்பவற்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாதியர் பணிப் பகிஸ்கரிப்பு:

# நோயாளர் அசௌகரியம்

■ ஒலுமுதீன் கியாஸ்



கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களின் பணிப் பகிஸ்கரிப்புப் போராட்டம், நேற்று (01) முன்னெடுக்கப்பட்டது.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை தாதிமார் சங்கம், பொது வைத்திய தாதிகள் சங்கம் முதலான சங்கங்கள் இணைந்தே இந்தப் பணிப் பகிஸ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

இதனால் நேற்றைய தினம் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டன.

இந்தப் போராட்டம் குறித்து தாதியர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "சுகாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்யக் கோரி, பல கட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில் தீர்வு எட்டப்படாத நிலையிலேயே, இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

கொவிட் -19 அசாதாரண காலத்தில் வைத்தியர்களை விட தாதியர்கள் பலர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்குரிய எந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அத்தோடு, பதவி உயர்வு, விடுமுறைகள் கூட வழங்கப்படவில்லை.

எனவே, தாதியர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்தப் பணிப் பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்" எனத் தெரிவித்தனர்.

இந்தப் பணிப் பகிஸ்கரிப்புப் போராட்டம், இன்றும் (02) முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





### வளமான எதிர்காலம்...



திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியிலுள்ள வீட்டுத் தோட்டக்காரர்கள், மிகவும் ஆர்வத்துடன் சேதன பசளை மூலமான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான சேதனப் பசளையைத் தாங்களே தயாரித்து, கீரை வகைகள், கத்தரி, வெண்டி, மிளகாய், புடலங்காய், பாகற்காய் ஆகிய மரக்கறி உற்பத்திகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளை மூலமாக அதிகமான விளைச்சல்களைப் பெறுவதாகவும் நஞ்சற்ற உணவு வகைகளைப் பெறுவதாகவும் அவர்கள் மகிழ்ச்சி வெளியிடுகின்றனர்.

(படங்கள் – ஹஸ்பர் ஏ ஹலீம்)

## வயலுக்குள் பாய்ந்த ஓட்டோ

சாரதி காயம்

■ வி.ரி.சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவில் நேற்று (01) காலை இடம்பெற்ற ஓட்டோ விபத்தொன்றில் அதன் சாரதி காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த இந்த ஓட்டோ, காரைதீவு பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்த போது ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக திடீரென பாதையை விட்டு விலகி, வயலுக்குள் பாய்ந்துள்ளது.

இதனால் ஓட்டோ பலத்த சேதமடைந்ததுடன், சாரதியும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனவும் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற இடத்துக்கு விரைந்து நிலைமைகளை ஆராய்ந்துள்ள சம்மாந்துறைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த விபத்து நேர்ந்த இடத்துக்கு அண்மையில் செங்கற்களை ஏற்றிவந்த லொறியொன்றும் கடந்த வாரம் இவ்வாறு விபத்துக்குள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுங்கத் திணைக்களத்தின்

### மேலதிக பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு



இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக அட்டாளைச்சே னையைச் சேர்ந்த சம்சுதீன் நியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த நிலையில், இந்தப் பதவி உயர்வு இவருக்குக் கிடைத்துள்ளது.

1984ஆம் ஆண்டு சுங்க அதிகாரியாக இணைந்து கொண்ட இவர், அதன் பின்னர் பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்று தற்போதைய நிலையை அடைந்துள்ளார்.

சட்ட முதுமாணியான சம்சுதீன் நியாஸ், CASE LAWS OF CUSTOMS எனும் நூலையும் எழுதியுள்ளார்.

இவர், தனது பாடசாலைக் கல்வியை, அட்டாளைச்சேனை அல் முனீரா வித்தியாலயம், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கற்றுள்ளார்.

நேற்றிரவு முதல்

## மருதமுனை முடங்கியது

■ ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர், அஸ்லம் எஸ். மௌலானா

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு மருதமுனை பிரதேசத்தை, நேற்று (01) இரவு 10 மணி முதல் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர மேயர் ஏ.எம் றகீப் தலைமையில், மாநகர மேயர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30) மாலை நடைபெற்ற உயர் மட்டக்கூட்டத்தில், மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மருதமுனை பிரதேசத்துக்கு வெளியில் இருந்து பொதுமக்கள் உட்பிரவேசிப்பதும், மருதமுனையில் இருந்து வெளியேறுவதும் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுமக்கள் முழுமையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றி மருதமுனை பிரதேசத்தில் இருந்து கொரோனாவை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



தோட்டக் கம்பனிகளின் கொட்டங்ளை அடக்க

# ‘இ.தொ.கா தயாராகிறது’

## பாரத் அருள்சாமி காட்டம்

எஸ்.கணேசன்




சில பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாகச் செயற்படுவதாகத் தெரிவித்த இ.தொ.காவின் உப செயலாளரும் பிரஜாசக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி, “அவற்றின் கொட்டத்தை அடக்குவதற்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க ஆட்டம் ஆரம்பமாகும்” என்றார்.

நேற்று முன்தினம் (30) நடைபெற்ற நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிநீர் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “ இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முழுப் போராட்டத்தின் விளைவாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைக்கப்பெற்றது. கடந்த காலங்களில் சம்பள உயர்வு தொடர்பான நடவடிக்கை, கூட்டு ஒப்பந்தம் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது. அப்போது கூட்டு ஒப்பந்தத்தை அடிமைச் சாசனம் என விமர்சித்தவர்கள், இன்று கூட்டு ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

எமது மக்களுக்கான தொழில் மற்றும் இதர உரிமைகளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் வென்றெடுக்கும். கம்பனிகளுடன் எமது பொதுச் செயலாளர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார். அதன் அடிப்படையில் நிச்சயம் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தூங்குகிறதா எனக் கேட்டு, சிலர் விமர்சன அரசியல் நடத்துகின்றனர். இ.தொ.கா தூங்கவில்லை; களத்தில் இறங்கி கம்பீரமாகச் செயற்படுகின்றது. ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்களே, எமது சேவையைக் கண்டு அஞ்சி, திடீரென எழுந்து உளறி, விமர்சன அரசியல் நடத்துகின்றனர். எப்படிதான் விமர்சித்தாலும் மக்கள் எம் பக்கம்; அவர்களுக்கான எமது பணிகள் தொடரும்” என்றார்.



## கொரோனா செய்தித் துளிகள்

01. கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹப்புகஸ்தலாவ, வீரபுர, கீழ் கொரக்கஓயாஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கடந்த 29ஆம் திகதியிலிருந்து தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (இரா.யோகேசன்)
02. ஊவா மாவிலகம என்ற இடத்தில் மரண வீடொன்றுக்குச் சென்ற ஐவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், 36 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எம். செல்வராஜா)
03. கந்தப்பளையில் நேற்று முன்தினம் (30) மாத்திரம் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஆர்.ரமேஸ்)
04. நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 7,461 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பதுடன், 134 பேர் உயிரிழந்துள்ளனர். (பி.கேதீஸ்)
05. கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டன்சினன் கிராம உத்தியோகத்தர் பிரிவின் டன்சினன் மத்திய பிரிவில் 2 மாதங்களில் 100 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, அத்தோட்டம் நேற்றிலிருந்து (01) தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. ( ரஞ்சித் ராஜபக்ஸ)

# சுகாதார சட்டங்களை மீறும் ஹட்டன் தனியார் பஸ்கள்

**அதிக பயணிகளுடன் ஹட்டனுக்கு வரும் தனியார் பஸ்கள் சில, பஸ் தரிப்பிடத்துக்கு அண்மித்த பகுதி அல்லது நகருக்குள் நுழைவதற்கு முன்னரே மேலதிக பயணிகளை இறக்கிவிடுகின்றன**

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் சேவையில் ஈடுபடும் சில தனியார் பஸ்கள், சுகாதார சட்டங்களை மீறி, அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதாகவும் இதனால் கொரோனா வைரஸ் தொற்று அதிகம் பரவக் கூடிய ஆபத்து உள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹட்டனிலிருந்து பொகவந்தலாவை, மஸ்கெலியா, சாமிமலை, போடைஸ் ஊடாக டயகம வரை பயணிக்கும் சில பஸ்களில் அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், சில பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் முகக் கவசம் அணியாமலோ உரிய முறையில் அணியாமலோ சேவையில் ஈடுபடுவதாகப் பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும், அதிக பயணிகளுடன் ஹட்டனுக்கு வரும் தனியார் பஸ்கள் சில, பஸ் தரிப்பிடத்துக்கு அண்மித்த பகுதி அல்லது நகருக்குள் நுழைவதற்கு முன்னரே மேலதிக பயணிகளை இறக்கிவிடுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தாதியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை

# மலையகத்திலும் முன்னெடுப்பு

எம். கிருஸ்ணா, மஹேஸ் கீர்த்திரத்ன, சுமணசிறி



2015ஆம் ஆண்டு தாதியர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 15,000 ரூபாய் போக்குவரத்து, விபத்துகளுக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தாதியர் தொழிற்சங்கம் நேற்று (01) முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையால், மலையகத்தின் பல வைத்தியசாலைகளின் பணிகள் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தன.

எனினும், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்களுக்கு, தாதியர்கள் செய்யும் கடமைகளை வைத்தியர்கள் முன்னெடுத்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, மாத்தளை பொது வைத்தியசாலையிலும் தாதியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் அவசர சிகிச்சைப் பிரிவு, கொரோனா சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் கடமையாற்றும் தாதியர்கள் கடமை பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திடாமலேயே கடமைகளில் ஈடுபட்டனர்.

மேலும், மொனராகலை மாவட்டத்திலுள்ள மொனராகலை பொது வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலைகளில் தாதியர்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைளால் வைத்தியசாலைகளின் அன்றாடப் பணிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன.

செந்திலின் தலையீட்டால்

# பாடசாலைக்கு புதிய காணி



இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்கு உள்ளாகிய இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தின் பாடசாலை கட்டடத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கு, மாற்றுக் காணியைப் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான சூழல் நிலவியது.

இந்நிலையில், 5 ஏக்கர் காணியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.

பாடசாலைக்குக் கட்டடத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கு புதிய காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் கடந்த மூன்று வருடங்களாக கல்வி அமைச்சு, உயர்மட்ட அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் எவ்விதத் தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்பட்டது.

இந்த நிலையிலேயே, பாடசாலையின் அதிபர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் ஆகியோர் செந்தில் தொண்டமானைத் தொடர்புகொண்டு, பாடசாலை காணிப் பிரச்சினையை அவரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

**இரத்தினபுரி புதிய நகரத்தை அண்மித்த பாம்கார்டன் தோட்டத்தின் வெரழுப்ப பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் காணி ஆவணம் கையளிக்கப்பட்டது**

இதைத் தொடர்ந்து, செந்தில் தொண்டமான் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளின் பிரகாரம், இரத்தினபுரி புதிய நகரத்தை அண்மித்த பாம்கார்டன் தோட்டத்தின் வெரழுப்ப பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் காணியை பாடசாலைக்கு வழங்குவதற்கான ஆவணம் பலாங்கொடை பெருந்தோட்ட நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியால், செந்தில் தொண்டமானிடம் கையளிக்கப்பட்டது.



# டொல்பின் வானில் சிக்கிய கழிவுத் தேயிலை

நவி

கண்டி, கெலிஓயா, பூவெலிகட பகுதியிலிருந்து வெலம்பொட பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட 80 மூடை கழிவுத் தேயிலை வெலம்பொட பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கழிவுத் தேயிலையைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட டொல்பின் ரக வானும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

மத்திய மாகாண கல்வி தரப்படுத்தல் வரிசையில்

# ஹட்டன் கல்வி வலயம் இரண்டாம் இடம்

துவாரகஷான்



நடந்து முடிந்த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் மத்திய மாகாணத்தில் குறிப்பிட்ட பாடங்களைக் கொண்டு, 15 கல்வி வலயங்களும் தரவரிசைப்படுத்தப்பட்டது. இதற்கமைய ஹட்டன் கல்வி வலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இந்தத் தரவரிசைப்படுத்தலுக்கு அமைய, வில்கமுவ கல்வி வலயம் கடந்த வருடம் உயர்தர பரீட்சையில் 70.96 சதவீதத்தைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், ஹட்டன் கல்வி வலயம் கடந்த உயர்தரப் பரீட்சையில் 66.18 சதவீதத்தைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வலப்பனை கல்வி வலயம் 65.45 சதவீதத்தைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அத்துடன், நான்காம், ஐந்தாம், ஆறாம் இடங்களை கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகியன பெற்றுள்ளன.

இந்தத் தரப்படுத்தலில் உயிரியல் விஞ்ஞானத்தில் கண்டி முதலாம் இடத்தையும் ஹட்டன் கல்வி வலயம் இரண்டாம் இடத்தையும் மாத்தளை கல்வி வலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நூரி தோட்டத்தில்

# விரைவில் தேயிலைத் திட்ட அதிகாரி அலுவலகம்

என். ஆராச்சி

தெரணியகல, நூரி தோட்டத்தில் நீண்ட காலமாக இழுபறியில் காணப்பட்டு வந்த தேயிலைத் திட்ட அதிகாரி அலுவலகம் அமைக்கும் நடவடிக்கை, இந்த வருடத்துக்குள் நிறைவடைய உள்ளது.

குறித்த அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவையால் அண்மையில் நடைபெற்றதுடன், இந்த வருடத்துக்குள் இதன் பணிகளை நிறைவு செய்து, மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

நூரி தோட்டத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிர்ச் செய்கை பண்ணப்படுவதுடன், சுமார் 2,000 சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில், தமது தேயிலைச் செய்கை தொடர்பான ஆய்வுகள், உரப் பயன்பாடுகள் உள்ளிட்ட ஆலோசனைகளை குறித்த திட்ட அதிகாரி அலுவலம் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



குளவிக் கொட்டு:

# வைத்தியசாலையில் ஐவர் அனுமதி

எம். கிருஸ்ணா

பொகவந்தலாவை-பிரிட்வெல் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களை குளவி கொட்டியதால், பொகவந்தலாவை வைத்தியசாலையில் ஐவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (01) காலை 11 மணியவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த இடத்தில் காணப்பட்ட மரத்திலிருந்த குளவிக் கூடொன்றின் மீது கழுகு மோதியதால், குளவிகள் திடீரென்று கலைந்து, தொழிலாளர்களைக் கொட்டியதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

126 மூடைகள் இரசாயன

# உரத்தைப் பதுக்கிய வர்த்தகர் கைது

துவாரகஷன்

அதிக விலைக்கு விற்பதற்காக நானுஓயா பிரதேச வர்த்தகர் ஒருவரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 126 மூடைகள் இரசாயன உரத்தைக் கைப்பற்றியதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவை அதிகார சபையின் சிரேஷ்ட விசாரணை அதிகாரி ஜே.எம். ஆர். கருணாரத்தன தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே, நுகர்வோர் சேவை அதிகார சபையினர் இந்த உரங்களைக் கைப்பற்றினர்.

கிழங்கு உரம், இலை உரம், டி.டீ.எம். கட்டி உரம் உள்ளிட்ட 50 கிலோ கிராம் நிறையுடைய 129 மூடைகள் இவ்வாறு பதுக்கப்பட்டு இருந்ததாகவும், நானுஓயா பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இவற்றைக் கைப்பற்றியதாகவும் நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவை அதிகார சபையின் சிரேஷ்ட விசாரணை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான வர்த்தகர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவரை, இம்மாதம் 8ஆம் திகதி நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# தவறி விழுந்தவனைத் தண்டிக்காதீர்; கைகொடுத்துத் தூக்கிவிடுங்கள்

ஒருவர் துன்பத்தில் துவண்டு கொண்டிருக்கும் போது, அவரைத் தூக்கிவிடுவதற்குக் கைகளைக் கொடுக்கவேண்டுமே தவிர, எட்டி உதைத்துத் தள்ளி, விரக்தி நிலைக்குச் செல்வதற்கு வித்திடக்கூடாது.

கொரோனா வைரஸ் தொற்று, சகலரையும் ஏதோவொரு வகையில், ஆட்டிப்படைத்துக் கொண்டுதான் இருக்கிறது. இயல்பாக இயங்குவதற்கு இன்னும் சில காலங்கள் எடுக்குமென்பதே பொதுவான அவதானிப்பாகும். இக்காலப்பகுதியில், பலர் தமது வாயையும் வயிற்றையும் ‘கட்டி’க்கொள்கின்றனர்.

இன்னும் சிலர், தாங்கள் நினைத்தபடி, காதுகளால் கேட்கமுடியாத அளவுக்கு பொருட்களின் விலைகளைக்கூறி, தருணம் பார்த்து, சம்பாதித்துக் கொள்கின்றனர். ‘தருணம்’ பார்ப்பதை விட்டுவிட்டு, நியாயத்தின் பக்கமாகச் செல்வதே யாவருக்கும் நன்மை பயக்கும்.

சில தொழிற்றுறைகள் ஓரளவுக்கேனும் இயங்குகின்றன. இன்னும் சில தொழிற்றுறைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன, சிலவற்றில், ஓரிண்டு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனாலும், பணியாளர்களின் எண்ணிக்கையில் குறைப்புகள் செய்யப்பட்டுள்ளன. இதில், தற்காலிக ஊழியர்களின் திண்டாட்டம் சொல்லில் அடங்காதவை.

ஆகையால், இரண்டொரு பணியாளர்களின் கடமைகளையும் எவ்விதமான மேலதிக வருமானங்களும் இன்றி, ஓராளாக நின்று செய்யவேண்டிய நிர்ப்பந்தம் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. அவற்றைத் தவிர்க்க முடியாது. இந்நிலையில்தான், வர்த்தகப் பிரதிநிதிகளின் கோரிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

“வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து, ஊழியர்களைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளதால், அவர்களைப் பணிநீக்கம் செய்வதைத் தவிர, மாற்று வழி இல்லை” என வர்த்தகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

பணிநீக்கம் என்பதற்கு அப்பால், மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திப்பதே உசிதமானது. மாதமொன்றுக்கு 15 நாள்கள் மட்டுமே வேலை வழங்கப்படும் நிலைமையையும் பெரும்பாலும் அவதானிக்க முடிகின்றது. பணிநீக்கம் செய்யப்பட்டால், வேலை வாய்ப்புகளில் ஒவ்வொருவரும் விரக்தியின் உச்சத்துக்கே சென்றுவிடுவர் என்பது மட்டுமே உண்மையாகும்.

ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யாது, பாதுகாக்கும்படி வர்த்தகர்களிடம் பிரதமர் விடுத்திருக்கும் வேண்டுகோளைப் பாராட்டவேண்டும். அதேபோல, நெருக்கடியிலிருக்கும் வர்த்தகர்களை வகைப்படுத்தி, அத்தொழிற்றுறையைப் பாதுகாக்கும் வகையிலான நிவாரணங்களை வழங்குவதற்கு வழிசமைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மாதச் சம்பளத்தில் ஜீவியம் நடத்தும் குடும்பங்களில் பல, சம்பளத்தை எடுத்த மறுநிமிடமே, கடனாளிகளாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டு விடுகின்றன. அந்தளவுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் நாளுக்கு நாள் எகிறிக்கொண்டே செல்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தி, நிர்ணய விலைகளை நிர்ணயிப்பதன் ஊடாக, அவ்வாறான குடும்பங்களைப் பாதுகாக்கமுடியும்.

பணிநீக்கம் செய்வதுதான் ஒரே தீர்வென நினைக்கும் நிர்வாகிகள், மாற்று யோசனைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும், கொரோனாவின் பாதிப்பால் விழுந்திருக்கும் ஒருவரை, மேலும் ஏறி மிதித்துவிடாது, அவ்வாறானவர்களுக்கு ஓரளவுக்குத் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது தலையாய கடப்பாடாகவே இருக்கிறது என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உலகில் பிறந்த எவருக்கும் இறப்பு இருக்கிறது. மனிதவாழ்வு நிலையற்றது என்பது யாவருக்கும் தெரியும். ஆனால், வாழும் வாழ்க்கையின் மூலம் நிலையான பெருமைகளை உருவாக்க முடியும். நிலைபேறுடைய ஞானமும் அறிவும் நற்குணமும் ஈகையும் உள்ளடங்கிய ஓர் அழகிய வாழ்க்கையை வாழ்வதன் மூலம் நிலையான பெருமைகள தன்னால் உருவாகும்.

சுருங்கச் சொன்னால், ஒழுக்க சீலமும் பேரறிவும் கொண்டவர், உலகில் நிலையான பெருமைகளைக் கொண்டவராகக் கணிக்கப்படுகின்றார். தேகம் அழியலாம்; ஆனால், அவர் செய்த சேவைகள் ஒருபோதும் சேதமடைவதில்லை.

கண்ணுக்கும் இதர புலன்களுக்கும் தோன்றாத உயிர் பற்றி ஆராயத் தெரியாது விட்டாலும், நல்லவர்களின் அழியாத வாழ்வின் பெருமைகளை அறிந்தபடிதானே இருக்கின்றோம்.

எனவே, எமக்குத் தேவையற்றதும் தெரியாததும் மயக்கமூட்டக் கூடிய வகைகளிலான கேள்விகளைக் கேட்டுக் காலத்தை வீணாகக் கழிக்காமல், இருக்கும் காலத்தில், பல்லுயிர்களுடன் வாழும் உயிர்கள், மேன்மை காணும் வகையில் எங்கள் கடமைகளைச் செய்து களிப்படைவோமாக!

பொருந்தாத சில கேள்விகளுக்கு விடைகள் தேடி அலைவதைவிடுத்து, ஆக்கபூர்வமான விடயங்களைப் புரிந்தாலே போதும். சிரமம் இன்றி எமது பயணம் தொடரும். ஒட்டாததை ஒட்ட வைக்க வேண்டாம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கட்டாக்காலி மாடுகளால் விபத்துகள்

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட அக்கரைப்பற்று - கல்முனை வீதி, அக்கரைப் பற்று - பொத்துவில் வீதி ஆகிய வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் வீதி விபத்துகள் அதிகரித்து உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக, இவ்வீதிகளில் பல விபத்துகள் இடம்பெற்று உள்ளதாகவும் அவற்றில் பலவற்றுக்கு கட்டாக்காலி மாடுகள் குறுக்கீடு செய்தமையே காரணமாக உள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரவு வேளையில், கட்டாக்காலி மாடுகளால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, உரிய அதிகாரிகள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கட்டாக்காலிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

–எஸ்.எம். இர்ஷத்



ஈழத்தமிழரின் இன்றைய சவால்:

# நாம் மனந்திறந்து பேசுவது எப்போது?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்று, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை என்ன? என்ற கேள்விக்கான ஒருமித்த பதிலை, ஈழத்தமிழ்ச் சமூகத்தால் சொல்லிவிட முடியாது.

அதேபோலவே, ஈழத்தமிழர் என்ற வரையறைக்குள், யாரெல்லாம் அடங்குகின்றார்கள் என்பதற்கும் ஒருமித்த பதில் இல்லை.

யாழ்ப்பாணத் தமிழர்கள், இலங்கையில் வாழும் எல்லாத் தமிழர்களையும் ஈழத்தமிழர்களாகக் கருத விரும்புகிறார்கள். ஆனால், ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்கள், தங்களை ஈழத்தமிழர்களாக அடையாளம் காட்ட விரும்புகிறார்களா என்ற கேள்வி இயல்பானது. அகஒடுக்குமுறைகள் நிரம்பிக் கிடக்கின்ற சமூகமொன்றில், புறஒடுக்குமுறையின் காரணமாக, அகஒடுக்குமுறைகளை மிகக் கொடூரமான முறையில், அரைநூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்த ஒரு சமூகம் எம்முடையது என்ற உண்மையை ஏற்க, நாம் இப்போதாவது தயாராக இருக்கிறோமா?

இலங்கையில் வாழும் தமிழரின் கடந்த ஒரு நூற்றாண்டுகால வரலாற்றின் இருண்ட பக்கங்களைப் பேசவோ, சுயவிமர்சனம் செய்யவோ நாம் தயாராக இல்லாதவரை, ‘தமிழர் ஒற்றுமை’ என்ற கோஷம் வலுவற்றது.

பொன்னம்பலம் இராமநாதன், ஆறுமுகநாவலர் ஆகியோரில் தொடங்கி, வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை இதயசுத்தியோடு நாம் சுயவிமர்சனம் செய்தாக வேண்டும். ஒரு ஜனநாயகப் பண்புள்ள சமூகத்தின் முக்கியமான குறிகாட்டி அது. தந்தையாகட்டும் தமையனாகட்டும் தம்பியாகட்டும், எவருமே கேள்விகளுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல!

கடந்த ஒரு நூற்றாண்டில், தமிழ்த் தேசியவாதம் பல்வேறு வடிவங்களை எடுத்தாலும், அது வலியுறுத்தி வந்த நலன்கள் வசதிபடைத்த, சமூகத்தின் மேல் நிலையிலிருந்து வந்தவர்களினதும் மேல் நிலையாக்கம் பெற்றவர்களினதும் நலன்களாகவே இருந்து வந்துள்ளன.

தமிழ் மக்கள், ஒடுக்கப்பட்ட சனங்கள் என்பதை, நமது தலைமைகள் என்றுமே விளங்கிக் கொண்டதில்லை. தமிழ்த் தலைமைகள், இன விடுதலையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனால், அது முழுச் சமூகத்தினதும் விடுதலையைப் பற்றியதாக இருந்ததில்லை. உண்மையில், தமிழ்ச் சமூகத்துக்குள் இருந்து வரும் பல சமூகக் கொடுமைகளையும் அநீதிகளையும் பற்றிப் பேசுவது, தமிழரின் ஒற்றுமைக்குக் கேடானது என்று தான் நமக்குச் சொல்லப்பட்டு வந்துள்ளது. இன்னொரு புறம், ‘தமிழ் பேசும் மக்கள்’ என்ற தேசிய கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது. ஆனால், அந்தத் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவாக, தமிழ் மொழியை விட, வேறெந்தச் சமூக அரசியல் அடையாளமும் முன்வைக்கப்படவில்லை. உண்மையில், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கோரிக்கை, அந்த மக்களின் ஏகப் பெரும்பான்மையினரின் நிலையைப் பற்றிக் கவனம்காட்டவில்லை.

1956இல், ‘சிங்களமே அரசகரும மொழி’ என்ற அரசியல் கோஷம் எழுந்ததையொட்டி, தமிழ்த் தேசிய அரசியல் வெறும் ‘மொழி உணர்ச்சி’ அரசியலாகியது. தமிழ் மக்களின் இருப்பை மிரட்டலுக்கு உட்படுத்திய திட்டமிட்ட குடியேற்றங்கள் பற்றிப் பேசப்பட்டது. ஆனால், நடைமுறையில் பயனுற எதுவுமே செய்யப்படவில்லை. அதற்கான முக்கிய காரணங்களில் சில, குடாநாட்டின் சமூக அமைப்புடன் தொடர்புடையவை.

தென்னிலங்கையில் ஒரிரு நகரங்களில் (குறிப்பாகக் கொழும்பில்) வாழ்ந்துவந்த வசதிபடைத்த தமிழர்களைப் பற்றிய கவலையை விட்டால், குடாநாட்டுக்கு வெளியே வேறெந்த அரசியல் அக்கறையும் அற்றதாகவே, தமிழ்த் தேசியவாதச் சிந்தனை தோற்றம் பெற்றது.

அது, ‘தமிழீழம்’ என்றோ தேசிய சுயநிர்ணய உரிமை என்றோ, தன்னை அறிவிக்காது தமிழினம், தமிழ் மக்கள் என்று பேசிய காலத்திலும், அதன் அரசியல் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்தியதாகவே இருந்தது. மொழியைப் பற்றிப் பேசப்பட்டாலும், தொடக்க நிலையில் சைவ-வேளாள உயர் வர்க்க நலன்களை விட, வேறெதற்கும் அரசியல் முக்கியத்துவம் இருக்கவில்லை.

விலக்கான ஒரு போக்காக, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இருந்தது. அது, ஒரு புறம் இலங்கை என்ற அடிப்படையிலும் இன்னொரு புறம், தமிழ்ச் சமூகத்துக்குள் சமூக அநீதியைப் பற்றியும் பேசியது. முழு இலங்கையும் கொலனிய ஆட்சியில் இருந்து விடுதலை என்ற கருத்தை, முதன் முதலில் முன்வைத்த அமைப்பு என்ற பெருமையும் அதற்குரியது. அதன் வீழ்ச்சியும் அதனிடத்தில் தமிழ் காங்கிரஸின் வருகையும் பழைமைவாத அரசியலின் வெற்றியை அடையாளப்படுத்தின.

தமிழரசுக் கட்சியின் வருகை, யாழ்ப்பாண மையப்பட்ட அரசியலிருந்து நாடளாவிய அரசியலை நோக்கிய நகர்வு என்பது, வெறும் மாயை என்பது 1956க்கும் பின்பு வேகமாகவே தெளிவாகியது.

தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்பதுடன், அவர்களது விடுதலையும் விமோசனமும் பல்வேறு தளங்களில் ஒற்றுமைப்பட்ட போராட்டங்களை வேண்டி நின்றன என்ற உண்மை, எந்தத் தமிழ் தலைமைக்கும் உறைக்கவில்லை.

சமஷ்டி வேண்டி நின்ற போதும் தமிழீழம் வேண்டி நின்ற போதும், இன்று அயல் நாடுகளின் தயவிலே தான் தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுத் தர இயலும் என்று புலம்புகிற நிலையிலும், தமிழ் மக்கள் தமது விடுதலையை வெல்ல யாருடன், எந்த அடிப்படையில் ஐக்கியப்படுவது என்பதைப் பற்றித் தமிழ்த் தலைவர்கள் பேச மறுத்தே வந்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கும் மலையகத் தமிழருக்கும் தலைமைதாங்கி வழிநடத்தும் தகைமையோ உரிமையோ, தமிழ்த் தேசியவாதிகளுக்கு அன்றும் இல்லை; இனியும் இல்லை. ஆனாலும், இன்றும் கூட, முஸ்லிம்களினதும் மலையகத் தமிழரினதும் தனித்துவத்தையும் தேசிய இன அடையாளத்தையும் ஏற்க மறுக்கிற போக்குத் தொடர்கிறது.

அச்சமூகங்களைத் தேசிய இனங்களாக ஏற்க ஆயத்தமாக உள்ளவர்கள் இடையிலும், அவர்களது விடுதலையையும் தமிழ் மக்களுடைய விடுதலையையும் எப்படி இணைப்பது என்ற சிந்தனை எதுவும் இல்லை. இந்த இயலாமை, இத் தேசிய இனங்கள் இரண்டும், பயனற்றதும் சுயநலமும் கொண்ட தலைமைகளின் ஆதிக்கத்தில் தொடர்ந்தும் இருக்கவே உதவியுள்ளன.

தமிழ் மக்களின் ஒன்றுமையைப் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால், தமிழ் மக்கள் நடுவே பண்பாட்டின் பேராலும் மரபின் பேராலும் பெண்கள் மீதும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மீதும் ஆதிக்கமும் அடக்குமுறையும் தொடருகின்றன.

அவற்றைப் பற்றிப் பேசுவற்குத் தடை விதிப்பதன் மூலம், அவை இல்லாமல் போய்விட மாட்டா. “அதைப் பேசி, ஒற்றுமையைக் குலைக்காதீர்கள்” என்ற குரல், புலம்பெயர்ந்தோரிடமிருந்தே இன்று அதிகமாக ஒலிக்கிறது. அதன் நோக்கம் அக்கறையல்ல; உள்ஒடுக்குமுறையைத் தொடர்வதில் உள்ள விருப்பின்றி வேறெதுவாக இருந்துவிட முடியும்.

சில புலம்பெயர் குரல்களில் தெரிகின்ற காலாவதியான தன்மை, நகைப்பையே ஏற்படுத்துகிறது. போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், ‘வட்டுக்கோட்டை முதல் முள்ளிவாய்க்கால் வரை’யான வரலாற்றை மனந்திறந்து பேசுவதற்கு, எல்லாத் தமிழ்த் தேசியவாதிகளும் அஞ்சுகின்றனர்.

அவ்வாறு பேசுவது, தமிழ்த் தேசியவாத அரசியலின் 70 ஆண்டுகால வெறுமையை அம்பலப்படுத்துமென அவர்கள் அறிவார்கள்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தேடும் ஆற்றலின்மையை, மக்களிடமிருந்து மறைக்கவும் தமிழ் மக்களின் அரசியலைத் தமது குறுகிய நலன்சார் வரையறைகளுக்குள் கட்டுப்படுத்தவும், பல்வேறு நாடகங்கள் தொடர்ந்து அரங்கேறுகின்றன. ஒரு பகுதியினர் போர்க்குற்ற விசாரணைகளை மிக வலியுறுத்துகின்றனர். இன்னொரு பகுதியினர் அதை அடக்கி வாசித்தாலும், விசாரணைகளின் தேவையை வசதி கருதிப் பேசுகின்றனர்.

ஒரு பகுதி, தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் என்று இரு தேச அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கோருகின்றனர். இவர்கள் வெளிப்படையாய் பிரிவினையை வலியுறுத்தத் தயங்கினாலும், அவர்களுடைய சைகைகள் யாவும் விடுதலைப் புலிகளின் அரசியலைத் தொடரும் முனைப்பைத் தமிழ் இளைஞர்களுக்கும் அதிருப்தியாளர்களுக்கும் மட்டுமன்றித் தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கும் உணர்த்துகின்றன.

தமிழ் மக்களுக்கான ஆபத்து, எல்லாத் தரப்புகளிடம் இருந்தும் காத்திருக்கின்றது என்பதுதான் அவலம். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைச் சொல்லும் எதிர்த்தரப்பும் அரசாங்கத்தில் அங்கம் வசிக்கும் ஆளும்தரப்புத் தமிழ்ப் பிரதிநிதிகளும், ஏமாற்றுவதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதைத் தொடர்ந்து நிரூபித்து வந்திருக்கிறார்கள். தமிழ்ச்சமூகம் மனந்திறந்து பேசவேண்டும். அதற்கான களங்கள் அமைக்கப்பட வேண்டும். தமிழ்ச் சமூகம் என்பது, பரந்துபட்டதும் பலகுரல்கள் கொண்டதும் என்ற உண்மையை இனியாவது ஏற்போம். ‘ஒரே குரலில் பேசுவது’ என்பது சாத்தியமாகாது. “ஒரே குரலில் பேசவேண்டும்” என்று கேட்பதும் ஒருவித பாசிச மனநிலையாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதம், தனது கொடுங்கரங்களால் இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களை ஒடுக்குகிறது. இதற்கு முகங்கொடுப்பது இன்று தலையாய பிரச்சினை. இதனை இலங்கையில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் இணைவதன் மூலம் எதிர்கொள்ளமுடியும்.

அந்த இணைவை சாத்தியமாக்க இயலாதபடி, இனவாதம் அனைத்து சமூகங்களிலும் வேரூன்றி உள்ளது. சிறுபான்மைச் சமூகங்கள் தமக்குள்ளும் ஏனைய சமூகங்களுடன் மனந்திறந்த உரையாடலைச் செய்தாக வேண்டும்.

புதுடெல்லி

பாரதிய ஜனதா கட்சி தொண்டர்கள்:

# விவசாயிகளின் போராட்டத்தை மறித்து கைகலப்பு



டெல்லி-உத்தரப் பிரதேச எல்லையான காஜிப்பூரில் வேளாண் சட்டங்களை எதிர்த்து போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளுக்கும், பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

விவசாயிகள் போராட்டம் நடத்தி வரும் பாதை வழியே பா.ஜ.க தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்றனர். அப்போது கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பாரதிய கிஸான் சங்கத்தின் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வரும் இடம் வந்ததும் இரு தரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் முடிந்ததாகத் தெரியவருகிறது. ஒருவரை ஒருவர் கம்புகளால் தாக்கிக் கொண்டனர். சில வாகனங்களும் சேதமைடந்ததாகக் கூறப்படுகிறது. பா.ஜ.க பிரமுகர் அமித் வால்மிகியை வரவேற்க நடைபெற்ற ஊர்வலம் என்று சொல்லப்படுகிறது.

இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களிலும் பகிரப்பட்டுள்ளது.

போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்தவே இந்தச் சதித் திட்டம் நடத்தப்பட்டுள்ளதாக விவசாயிகளின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் முறை தவறி நடந்து கொண்டதுடன், சதியின் ஒருபகுதியாக தங்கள் வாகனங்களை தாங்களே சேதப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாரிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.



உலக சுற்றுலாத்துறையில்

# 2023 வரை மீட்சியை எதிர்பார்க்க முடியாது

சில மேற்குலக நாடுகளைத் தவிர்த்து, சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த ஆண்டிலும் சரிவைப் பதிவு செய்யும் என்பதுடன், இதன் காரணமாக 2.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் முன்னெடுத்திருந்த ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், 2023 ஆம் ஆண்டு வரை இந்தத் துறை மீட்சியைப் பதிவு செய்யாது எனவும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

பல நாடுகளின் வாழ்வாதாரமாக அமைந்துள்ள இந்தத் துறைக்கு, வெளிநாட்டு சுற்றுலா மீட்சியில் கொவிட்-19 தடுப்பூசி செலுத்தல், சான்றிதழ்கள் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன.

2019 ஆம் ஆண்டின் முன்னர் நிலவிய தொற்றுப் பரவலுக்கு முன்னரான சூழலுடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் விஜயம் 73 சதவீதத்தால் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

இதனூடாக, சுற்றுலாத் துறைசார்ந்த பிரிவுகளில் 2.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பாகப் பதிவு செய்திருந்ததாக ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா நிறுவனம் (UNWTO), UNCTAD ஆகியன அறிக்கையிட்டிருந்தன.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களும் மோசமானதாக அமைந்துள்ளன. குறிப்பாக பெருமளவு பிரயாணங்கள் இடம்பெறவில்லை. ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் ஓரளவு மீட்சி ஏற்படும் எனும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. வட அமெரிக்கா, ஐரோப்பாவில் ஓரளவு மீட்சி பதிவாகலாம் என UNCTAD இன் ஆய்வாளரான ராஃல்வ் பீற்றர்ஸ் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் சூழ்நிலை சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நிலவியதை ஒத்ததாக அமைந்துள்ளது. பல வாழ்வாதாரங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. நீண்ட கால அடிப்படையில் எமது எதிர்பார்ப்பு யாதெனில், 2023 ஆம் ஆண்டின் பின்னரே, 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த மீட்சி என்பது பிராந்தியத்துக்கு பிராந்தியம், நாட்டுக்கு நாடு வேறுபடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முதல் (01) ஐரோப்பிய ஒன்றியத்தால் அமல்படுத்தப்பட்டுள்ள டிஜிட்டல் கொவிட்-19 சான்றிதழ் என்பது, பிராந்திய ஒருமைப்பாட்டை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஆசிய பசுபிக் பிராந்தியம் அதிகளவு மூடப்பட்ட பகுதியாக அமைந்துள்ளது. இப்பிராந்தியத்தைச் சேர்ந்த பல நாடுகள் முழுமையாக அல்லது பல கட்டுப்பாடுகளுடன் மூடப்பட்டுள்ளன என்றார்.

ஹாவேரி

பெண்ணுக்கு பாலியல் பலாத்கார முயற்சி;

## காப்பாற்றியது ஐந்தறிவு எருமை

மாடு மேய்க்கச் சென்ற பெண்ணை, பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்த இரு நபர்களை, எருமை மாடு விரட்டியடித்து, அப்பெண்ணைக் காப்பாற்றிய சம்பவம் ஹாவேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஹாவேரி சவனுரின், ஹிரேமரளிஹள்ளி கிராமத்தில் வசிக்கும் பெண், மதியம், தனது கிராமத்தின் அருகிலுள்ள, நீலகிரி தோப்பில் எருமை மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த இரண்டு இளைஞர்கள், அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தனர். இளைஞர்களின் பிடியிலிருந்து குறித்த பெண் தப்பித்து ஓடினார்.

அப்பெண்ணின் அலறல் சத்தத்தைக் கேட்டு, மேய்ந்து கொண்டிருந்த எருமை மாடு, பெண் ஆபத்திலிருப்பதை உணர்ந்து ஓடி வந்து, இளைஞர்களை முட்டித்தள்ளியது. அப்போது, ஒருவர் பெண்ணைப் பிடிக்க முற்பட்டார். ஆனால், எருமைமாடு இரு நபர்களையும், முட்டி விரட்டியடித்தது. தப்பி ஊருக்குள் ஓடி வந்த பெண், நீலகிரி தோப்பில் நடந்த சம்பவத்தை விவரித்தார். கிராமத்தினர் உதவியுடன், பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர்; மற்றவர் தலைமறைவாகிவிட்டார். விஷமிகள் பிடியிலிருந்து, பெண்ணை காப்பாற்றிய எருமை மாடு பற்றி கிராமத்தினர், ஆச்சரியமாகப் பேசுகின்றனர்.

தேவாஸ்

காதல் தோல்வி:

## குடும்பம் கொன்று குவிப்பு

மத்திய பிரதேசத்தில், பழங்குடியின குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரைக் கொன்று புதைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய பிரதேசத்தில், தேவாஸ் மாவட்டத்தில், மே 13ஆம் திகதி பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தில் ஐந்து பேர் திடீரெனக் காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் பொலிஸில் புகார் அளிக்கப்பட்டது. மாயமானோரைத் தேடும் பணிகளை, பொலிஸார் ஆரம்பித்தனர். இரு சகோதரர்களை பொலிஸார் கைது செய்தனர்.


பின்னர் அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மாயமான ஐந்து பேரையும் கொன்று, தங்கள் தாத்தாவின் விவசாய நிலத்தில் புதைத்துவிட்டதாக, அதிர்ச்சிக்குரிய தகவலை அவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழியைத் தோண்டினர். அதில் இருந்து மாயமான, ஐந்து பேரின் எலும்புக்கூடுகளும் கண்டெடுக்கப்பட்டன.

பூரண விசாரணையின்போது, காதல் விவகாரம் எனத் தெரிய வந்தது.

புதுடெல்லி

ராம்தேவ்வின்

## உண்மைப் பதிவு எங்கே?



அலோபதி மருத்துவத்துக்கு எதிராக பேசியதாக தொடரப்பட்ட வழக்கின் விசாரணையின்போது, ‘ராம்தேவ் பேசியது தொடர்பான உண்மையான முழுப் பதிவு எங்கே’ என, உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. யோகா குருவான பாபா ராம்தேவ், அலோபதி மருத்துவத்துக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருந்தார்.

பாபா ராம்தேவ் மீது, இந்திய மருத்துவர் சங்கத்தின் பல கிளைகள் சார்பில் பீஹார், சத்தீஸ்கர் என, பல மாநிலங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

வழக்குகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, டெல்லிக்கு மாற்றக்கோரியும், அந்த புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க தடை கோரியும், ராம்தேவ் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பாஞ்ச்மஹால்

## ‘பேய்கள் எனக்கு தொந்தரவு கொடுக்கின்றன’ பொலிஸில் வழக்கு தொடரக் கோரிக்கை

‘என்னை வேலை செய்ய விடாமல் கொலை செய்வதாக மிரட்டுகிறார்கள்’ என, விவசாயி ஒருவர் கொடுத்த புகாரில், பேய்கள் மீது குஜராத் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

குஜராத்தில் உள்ள பாஞ்ச்மஹல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி, அங்குள்ள பொலிஸ் நிலையத்துக்கு தலைதெறிக்க ஓடி வந்தார். அவரை ஆசுவாசப்படுத்திய பொலிஸார் விசாரித்தனர். “தோட்டத்தில் என்னை வேலை செய்ய விடாமல், இரண்டு பேய்கள் தொடர்ந்து தொந்தரவு கொடுக்கின்றன. கொலை செய்வதாகவும் மிரட்டுகின்றன” என, அந்த நபர் கூறியுள்ளார். அரண்டுபோன பொலிஸார், “என்ன செய்ய வேண்டும்” எனக் கேட்டுள்ளனர். “அந்தப் பேய்கள் மீது வழக்கு பதிவு செய்யுங்கள். அவை பயந்து ஓடிவிடும்” என, அவர் கூறியுள்ளார். அவர் தொந்தரவு செய்யவே, வேறு வழியில்லாமல் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். பின், அவருடைய குடும்பத்தாரை அழைத்து விசாரித்தனர்.

மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர், 10 நாள்களாக மாத்திரை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது தெரியவந்தது. குடும்பத்தாருக்கு அறிவுரை கூறி, அந்த நபருக்கு ஆறுதல் கூறி, பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

புதுடெல்லி

மகளிர் ஆணையம் தலையீடு

## ‘ஆபாசப் படங்களை நீக்குங்கள்’




டுவிட்டர் சமூக ஊடகப் பக்கங்களிலிருந்து ஆபாசப் படங்களையும் அவை தொடர்பான விடயங்களையும் ஒரு வாரத்துக்குள் நீக்குமாறு டுவிட்டர் நிறுவனத்தின் இந்திய மேலாண்மை இயக்குநருக்கு, தேசிய மகளிர் ஆணையம் உத்தர விட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய மகளிர் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: டுவிட்டர் சமூக ஊடகத்தில் சிலரது பக்கங்களில் ஆபாசப் படங்களும் அவை தொடர்பான விடயங்களும் தேசிய மகளிர் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றை ஒரு வாரத்துக்குள் நீக்குமாறு டுவிட்டர் நிறுவனத்தின் இந்திய பிரிவு மேலாண்மை இயக்குநருக்கு மகளிர் ஆணையத் தலைவர் ரேகா சர்மா கடிதம் எழுதியுள்ளார். மேலும், இந்த விவகாரம் குறித்து புலனாய்வு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு டெல்லி பொலிஸ் ஆணையருக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஆணையம் டுவிட்டரின் கவனத்துக்குக் கொண்டு சென்றது.

இந்திய சட்டங்களை மீறுவதோடு, அந்த நிறுவனத்தின் சொந்தக் கொள்கைக்கும் முரணானது என்று தெரிந்திருந்தும் அப்படங்களை நீக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அறிந்து மகளிர் ஆணையம் வேதனையடைகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தில்

## புதிய நிர்வாக சபை தெரிவு



இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 182ஆவது வருடாந்த பொது ஒன்றுகூடலின் போது, அதன் புதிய தவிசாளராக விஷ் கோவிந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பின் தவிசாளராக இரண்டு வருட காலம் செயலாற்றியிருந்த கலாநிதி ஹான்ஸ் விஜேசூரியவின் பதவிக் காலம் நிறைவுக்கு வந்ததை தொடர்ந்து, அந்த நிலைக்கு கோவிந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளராக கோவிந்தசாமி செயலாற்றுவதுடன், வட்டவளை பிளான்டேஷன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் செயலாற்றியிருந்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவராக ஏர்னஸ்ட் அன்ட் யங் சிரேஷ்ட பங்காளரும் வரிப் பிரிவின் தலைமை அதிகாரியுமான துமிந்த ஹுலன்கமுவ ஆகியோர் நியமிக்கப்பட்டதுடன், பிரதி உப தவிசாளராக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தவிசாளர் கிரிஷான் பாலேந்திரா நியமிக்கப்பட்டார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாக ஜெட்விங் ட்ராவல்ஸ் தலைமை அதிகாரியும் முகாமைத்துவ பணிப்பாளரும், ஜெட்விங் ஹோட்டல்ஸ் தலைமை அதிகாரி ஷிரோமால் கூரே, காகில்ஸ் ஃபுட் கம்பனி முகாமைத்துவ பணிப்பாளரும், காகில்ஸ் (சிலோன்) பணிப்பாளருமான அசோக பீரிஸ், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் செயலாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஞ்சுள டி சில்வா ஆகியோர் மீளத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஹேலீஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சரத் கனேகொட, லயன் பிரெவரி சிலோன் தவிசாளரும் சிலோன் பெவரேஜ் ஹோல்டிங்ஸ் தவிசாளருமான அமல் கப்ரால், ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரி பிங்குமல் தேவதந்திரி ஆகியோர் பணிப்பாளர் சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு கோவிந்தசாமி குறிப்பிடுகையில், “இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இந்த உயர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதையிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன். பணிப்பாளர் சபை, செயலகத்துடன் இணைந்து செயலாற்ற எதிர்பார்க்கின்றேன். ‘தேசத்துக்கு முக்கியத்துவம்’ எனும் வழிமுறையைப் பின்பற்றி தனியார் துறையின் நலன் தொடர்பில் கவனம் செலுத்த எதிர்பார்க்கின்றேன். இந்த அமைப்பால் முன்னெடுக்கப்படும் சிறந்த செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கின்றேன். 183 வருட கால வரலாற்றைக் கொண்ட இந்த அமைப்பின் வரலாற்றில் முதல் தடவையாக மெய்நிகரான முறையில் பொறுப்பை ஏற்றுள்ள நான், எனது ஆற்றலின் உச்ச கட்டத்துக்கமைய சேவையாற்ற எதிர்பார்க்கின்றேன்” என்றார்.



செலான் வங்கியின்

## கிளிநொச்சி கிளை புதிய முகவரியில்...

செலான் வங்கியின் கிளிநொச்சி கிளை, புதிய முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சிக்கல்களில்லாத உயர் தரம் வாய்ந்த வங்கியியல் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் நவீன வசதிகள் படைத்த கட்டடத்துக்கு இந்தக் கிளை மாற்றப்பட்டுள்ளது. இப்புதிய கிளை இல. 155, 155/1, A-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ளது.

செலான் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்தளவு பிரத்தியேகமான சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தக் கிளை அமைந்துள்ளதுடன், உயர் சௌகரிய சேவைகளை உறுதி செய்வதாகவும் உள்ளது. புதிய இடம் மத்திய நிலையமாக அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு கிளையை, ATM சேவைகளை இலகுவாக அணுகக்கூடிய வகையில் அமைந்துள்ளது. தினசரி மு.ப. 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை இந்தக் கிளை திறந்திருக்கும்.

தினசரி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது சுகாதார அதிகார அமைப்புகளால் வழங்கப்பட்டுள்ள சகல விதிமுறைகளையும் செலான் வங்கி பின்பற்றுவதுடன், இந்தத் தொற்றுப் பரவலுடனான சூழலில் அனைவரையும் அவசியமான முற்காப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவித்துள்ளது. தமது தினசரி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு, செலான் வங்கியின் டிஜிட்டல் கட்டமைப்புகளை பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சீனா

சீனாவை அச்சுறுத்த முயலும் வெளிநாட்டுப் படைகளின்

# ‘தலைகள் துண்டிக்கப்படும்’

சீனாவை அச்சுறுத்த முயலும் வெளிநாட்டுப் படைகளின் தலைகள் துண்டிக்கப்படும் என சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் நேற்று (01) எச்சரித்துள்ளார்.

சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியானது உருவாக்கப்பட்டமையின் நூற்றாண்டு பூர்த்தியான நிலையிலேயே ஜனாதிபதி ஜின்பிங்கின் கருத்து வெளியாகியுள்ளது.

‘தியனமென்’ சதுக்கத்திலிருந்து ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக உரையாற்றிய ஜனாதிபதி ஜின்பிங், சீன இராணுவத்தை மேம்படுத்த உறுதியளித்ததுடன், தாய்வானை மீளிணைப்பதில் உறுதி பூண்டுள்ளார். இதேவேளை, பழைய உலகத்தை அழிப்பதில் மட்டும் சீன மக்கள் வல்லவர்கள் அல்ல என்பதுடன், அவர்கள் புதிய உலகத்தையும் உருவாக்கியுள்ளனர் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.




ரஷ்யா

போரை ஆரம்பிக்காமல்

## ‘கப்பலை மூழ்கடித்திருக்கலாம்’

மூன்றாவது உலகப் போரை ஆரம்பிக்காமல், பிரித்தானிய போர்க் கப்பல் ஒன்றை ரஷ்யா மூழ்கடித்திருக்கலாம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஐக்கிய அமெரிக்காவின் வகிபாகம் ஒன்று இருந்ததாக ஜனாதிபதி புட்டின் குற்றஞ்சாட்டியுள்ளார்.



வாக்காளர்களுடனான தனது வருடாந்த கேள்வி, பதில் அமர்விலேயே குறித்த கருத்தை ஜனாதிபதி புட்டின் வெளிப்படுத்தியுள்ளார்.

கிரீமியாவிலுள்ள ரஷ்யப் படைகள் இவ்வாறான ஊடுருவல்களின்போது எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கான ஆத்திரமூட்டல் இது என ஜனாதிபதி புட்டின் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தை ஐ. அமெரிக்காவும், பிரித்தானியாவும் இணைந்து திட்டமிட்டதாகக் குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி புட்டின், அன்று கிரேகத்திலிருந்து மேலெழும்பிய ஐ. அமெரிக்க உளவு விமானம் ஒன்று, எவ்வாறு பிரித்தானியக் கப்பலுக்கு, ரஷ்யா பதிலளிக்கின்றது என்பதைப் பார்த்ததாகக் கூறியுள்ளார்.

கனடா



பாடசாலைக்கு அருகில்

## 182 புதைகுழிகள் கண்டுபிடிப்பு

கனடாவின் பிரித்தானியக் கொலம்பிய மாநிலத்திலுள்ள முன்னாள் வதிவிடப் பாடசாலை ஒன்றின் நிலங்களுக்கு அருகில் 182 பேரின் எச்சங்களை கண்டுபிடித்துள்ளதாக அந்நாட்டிலுள்ள பழங்குடி இனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எச்சங்கள் பாடசாலையின் முன்னாள் மாணவர்கள் உடையதுதானா என இப்போது தெரிவிக்க முடியாது என லோவர் கூடெனே பாண்ட் கூறியுள்ளது.

இதேவேளை, விசாரணைகள் தொடரும் நிலையில் மேலும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படும் என நம்புவதாக பழங்குடியினத் தலைவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான்

பாகிஸ்தானிய

## படைவீரர்கள் கொல்லப்பட்டனர்

ஆப்கானிஸ்தானின் பக்டிகா மாகாணத்தில், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளின் எல்லை கடந்த சூட்டில் குறைந்தது இரண்டு பாகிஸ்தானியப் படைவீரர்கள் கொல்லப்பட்டதாக, பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.



வட வசிரிஸ்தான் பிராந்தியத்திலுள்ள இராணுவ நிலையிலிருந்த பாகிஸ்தானியப் படைகளே இலக்கு வைக்கப்பட்ட நிலையில், அவை திருப்பித் தாக்கியதாக அறிக்கை ஒன்றில் பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளது.

இத்தாலி



படகு கவிழ்ந்ததில்

## எழுவர் பலி; 10 பேர் மாயம்

இத்தாலியத் தீவான லம்பெடுஸாவிலிருந்து எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் அகதிகளைக் கொண்டிருந்த படகு ஒன்று மூழ்கியதில், கர்ப்பிணி ஒருவர் உட்பட குறைந்தது எழுவர் மூழ்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தை அடுத்து ஏறத்தாழ 10 பேரைக் காணவில்லை என இறப்புகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் அணியின் சட்டமா அதிபர் லூயிஜி பற்றொனக்கியோ தெரிவித்துள்ளார்.

துனீஷியாவிலிருந்து அகதிகள் பயணத்தை ஆரம்பித்ததாக நம்பப்படுவதாக பற்றொனக்கியோ மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில், ஏறத்தாழ 46 பேரை மீட்ட கரையோரக் காவற்படைப் பிரிவுகள், அவர்களை லம்பெடுஸாவுக்கு கொண்டு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியா

## டெல்டா பிளஸால் அதிகம் பேர் பாதிப்பு

அவுஸ்திரேலியாவின் நியூ சௌவுத் வேல்ஸ் நகரில் டெல்டா பிளஸ் கொரோனாவால் அதிகம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

மின்னல் வேகத்தில் பரவி வரும் டெல்டா பிளஸ் கொரோனாவுக்கு அவுஸ்திரேலியாவும் தப்பவில்லை. டெல்டா பிளஸ் கொரோனா வேகமாக பரவி வருவதையடுத்து அவுஸ்திரேலியாவின் நான்கு நகரங்களில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரான பெர்த் நகரில் செவ்வாய்க்கிழமை (29) இரவு முதல் 4 நாள்களுக்கு ஊரடங்கு அமல்படுத்தப்படுகிறது. குயின்ஸ்லாந்து தலைநகர் பிரிஸ்பேன் நகரில் செவ்வாய்க்கிழமை மாலை முதல் அடுத்த 3 நாள்களுக்கு ஊரடங்கு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

சிட்னியில் ஜூலை 9ஆம் திகதி வரையிலும், டார்வின் நகரில் வரும் வெள்ளிக்கிழமை (02) வரையிலும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது. மேலும், நியூ சௌவுத் வேல்ஸ் நகரில் உள்ளிட்ட நகரங்களிலும் ஊரடங்கு அமலில் உள்ளது.

அவுஸ்திரேலியாவில் அஸ்ட்ரா செனகா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. மொத்த மக்கள் தொகையில் ஐந்து சதவீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தாததால் டெல்டா வகை கொரோனா அதிகமாகப் பரவுகிறது எனவும் அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

பந்துவீச்சாளர்களின் தரவரிசை:

# முன்னேறிய ஹஸரங்க

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு, இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் வனிடு ஹஸரங்க முன்னேறியுள்ளார்.




இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே, 10ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை ஹஸரங்க அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு:

தப்ரையாஸ் ஷம்சி, 2. ரஷீட் கான், 3. அஸ்தன் அகர், 4. அடில் ரஷீட், 5. வனிடு ஹஸரங்க, 6. முஜீப் உர் ரஹ்மான், 7. டிம் சௌதி, 8. அடம் ஸாம்பா, 9. இஷ் சோதி, 10. மிற்செல் சான்ட்னெர்.

இதேவேளை, தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் இரண்டு இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளிலும் 92 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் எவின் லூயிஸ், 13ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு:

டேவிட் மலன், 2. ஆரோன் பின்ஞ், 3. பாபர் அஸாம், 4. டெவோன் கொன்வே, 5. விராட் கோலி, 6. றஸி வான் டர் டுஸன், 7. லோகேஷ் ராகுல், 8. கிளென் மக்ஸ்வெல், 9. மார்டின் கப்தில், 10. எவின் லூயிஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு:

மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. கிளென் மக்ஸ்வெல், 4. றிச்சர்ட் பெரிங்டன், 5. கரெத் டெலனி.

இந்நிலையில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் 101 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் கேன் வில்லியம்ஸன், இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு:

கேன் வில்லியம்ஸன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. மர்னுஸ் லபுஷைன், 4. விராட் கோலி, 5. ஜோ றூட், 6. ரோஹித் ஷர்மா, 7. றிஷப் பண்ட், 8. டேவிட் வோணர், 9. குயின்டன் டி கொக், 10. ஹென்றி நிக்கொல்ஸ்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு:

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. டிம் சௌதி, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. நீல் வக்னர், 6. ககிஸோ றபாடா, 7. ஸ்டுவர்ட் ப்ரோட், 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. மிற்செல் ஸ்டார்க், 10. ஜேஸன் ஹோல்டர்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு:

ஜேஸன் ஹோல்டர், 2. பென் ஸ்டோக்ஸ், இரவீந்திர ஜடேஜா, 4. இரவிச்சந்திரன் அஷ்வின், 5. ஷகிப் அல் ஹஸன்.

விம்பிள்டன் டென்னிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்ட கெனின், அன்றீச்சு



பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் நடைபெற்று வருகின்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் ஆறாம் நிலை வீராங்கனையான சோஃபியா கெனினும், ஏழாம் நிலை வீராங்கனையான பியங்கா அன்ட்றீச்சுவும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது இரண்டாவது சுற்றுப் போட்டியில் சக ஐக்கிய அமெரிக்க வீராங்கனையான மடிஸன் பிரெங்கிளை எதிர்கொண்ட ஐ. அமெரிக்க வீராங்கனையான கெனின், 2-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார். இதேவேளை, தனது முதலாவது சுற்றுப் போட்டியில் பிரான்ஸின் அலிஸே கொர்னெட்டை எதிர்கொண்ட கனடாவின் பியங்கா அன்ட்றீச்சு, 2-6, 1-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இங்கிலாந்துக்கு எதிரான

## தொடரை இழந்த இந்தியா

இங்கிலாந்து பெண்கள் அணிக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்திய பெண்கள் அணி இழந்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், டௌன்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்தே, இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை இந்தியா இழந்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 221/10 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிதாலி ராஜ் 59 (92), ஷெஃபாலி வர்மா 44 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேட் குறொஸ் 5/34, சோஃபி எக்லேஸ்டோன் 3/33, நட் ஷிவர் 1/27)

இங்கிலாந்து: 225/5 (47.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சோஃபியா டங்க்ளே ஆ.இ 73 (81), லோரன் வின்ஃபீல்ட்-ஹில் 42 (57) ஓட்டங்கள். பந்துவீச்சு: பூனம் யாதவ் 2/63, ஜூலான் கோஸ்வாமி 1/39, ஷிகா பாண்டே 1/34, ஸ்னே ராணா 1/43)

போட்டியின் நாயகி: சோஃபியா டங்க்ளே



இங்கிலாந்துக்கு எதிரான

## முதலாவது டெஸ்டில் கில் சந்தேகம்

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஷுப்மன் கில் விளையாடுவது சந்தேகத்துக்கு இடமாகியுள்ளது.

காலில் கில் காயத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எக்காலில் கில் காயத்துக்குள்ளார் என்பது இன்னும் தெளிவில்லாமலுள்ளது. எங்கே, எப்போது கில் காயமடைந்தார் என்பதும் தெரியவில்லை.

இந்நிலையில், தொடர்ந்தும் இங்கிலாந்தில் கில் இருக்கவுள்ள நிலையில், காயத்தின் மோசமான நிலையைப் பொறுத்து இந்திய அணி முகாமைத்துவம் இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

அந்தவகையில், காயத்திலிருந்து கில் குணமடையத் தவறினால், அவரை அணியில் பிரதியிட மாயங்க் அகர்வால், லோகேஷ் ராகுல் ஆகியோர் குழாமில் காணப்படுவதுடன், மேலதிக வீரர்கள் பட்டியலில் புதுமுகவீரர் அபிமன்யு ஈஸ்வரன் காணப்படுகின்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 2 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.